# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை.
## அசல் வழக்கு எண்.8/2024

வாதிகள் தரப்பு 3 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

-----------------------------------------------------------

பெயர் ஜெயசீலி வா.சா.–3

த/பெ.

கிராமம் தொழில் கிராம நிர்வாக அலுவலர்

தாலுகா அருப்புக்கோட்டை வயது

-----------------------------------------------------------

முதல் விசாரணை 07–07–2026

நான் கல்லூரணி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சிய அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சிய அழைப்பாணையில் கூறியுள்ள ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகலை கொண்டு வந்துள்ளேன்.

1) என்னுடைய அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) அழைப்பாணை சார்பு நகல் **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) சர்வே எண்.477/1ன் புலவரைபடம் உண்மை நகல் **சா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) சர்வே எண்.477/1ன் அ பதிவேடு உண்மை நகல் **சா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

சர்வே எண்.477/1 தற்போது பூமியில் தெருவாக உள்ளதா என்றால் ஆமாம். எங்கள் சர்வே ஆவணங்களின் படியும் சர்வே எண்.477/1 தெரு என்றுதான் வகைப்படுத்தப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S